**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 231/2024 ஜெயபாலன் (பிசா1) தேதி: 08.04.2026.</u>**

**<u>பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

27.03.2016 தேதியில் தான் உறவின் முறை சங்க துனை விதிகள் சிறப்பு பொதுக்குழுவில் திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி பொதுக்குழு குறித்த அழைப்பிதழ் என்றால் சரிதான். அந்த பொதுக்குழு கூட்டத்திற்கு தலைமை வகித்தது APK பழனிச்செல்வம் என்றால் சரிதான். மேற்படி APK பழனிச்செல்வம் அந்த சமயத்தில் கோவில்பட்டி தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் கோவில்பட்டி நாடார் உறவின் முறை சங்க தலைவராக MS MR. ராஜசேகர் என்பவர் இருந்தார் என்றால் சரிதான். சங்க துனை தலைவராக A கண்ணப்பன் என்பவர் இருந்தார் என்றால் சரிதான். சங்க பொருளாலராக M செல்வராஜன் என்பவர் இருந்தார் என்றால் சரிதான். அந்த அழைப்பிதழில் சங்க துனை விதிகள் திருத்தம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், குறிப்பி,ட்டு என்ன துனை விதிகள் திருத்தம் சம்பந்தமாக என அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நாடார் உறவின் முறை சங்க பொதுக்குழு கூட்ட அழைப்பிதழ், துனை விதிகள் திருத்தம் சம்பந்தமான தீர்மாணம்,. திருத்தம் செய்யப்பட்ட துனை விதிகள் அடங்கிய கோப்பு என்றால் சரிதான். அந்த கோப்பு **வா.சா.ஆ.6.** வா.சா.ஆ.6 ல் கண்ட பொதுக்குழு நடந்த போது தலைமை வகித்தவர் அன்றைய தேதியில் நாடார்

உறவின் முறை சங்கத்தில் எந்த பொருப்பிலும் இல்லை என்றால் அவர் பொதுக்குழு உறுப்பினராக இருந்தார். வா.சா.ஆ.6 ல் கண்ட துணை விதிகள் சரியானவை என்றால் சரிதான். அந்த துணை விதிகளில் சங்க தேர்தல் எவ்வாறு நடத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த விதிகளுக்கு எதிராக தேர்தல் நடந்தபட்டிருந்ததால் அந்த தேர்தல் செல்லாது என்றால் அது சூல்நிலையை பொருத்து ஆகும். சஙக துணை விதிகளுக்கு விரோதமாக கூட தேர்தல் நடத்தலாமா என்றால் உயர் நீதிமன்றத்தில் அனுமதி வாங்கி தேர்தல் நடந்தது. தாவாப்படும் தேர்த் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் அனுமதி வாங்கப்பட்டதா என்றால் அனுமதி வாங்கிதான் நீதிமன்ற ஆணையர் தேர்தல் நடத்தினார். சங்க தேர்தல் சம்பந்தமாக சங்க உறுப்பினர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அந்த அடிப்படையில் உத்தரவு வழங்கப்பட்டு தேர்தல் நடந்தது என்றால் சரிதான். துணை விதி 26 க்கு எதிராக தேர்தல் நடந்தால் அது செல்லாது என்றால் சூல்நிலைக்கு தகுந்தமாதிரி தேர்தல் நடத்தலாம். சூல்நிலைக்கு தகுந்தமாதிரி தேர்தல் நடத்தலாம் என துணை விதிகளில் உள்ளதா என்றால் இல்லை. துணை விதி 26 ல் தேர்தல் எவ்வாறு நடத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விதிக்கு எதிராக தேர்த்ல் நடந்திருந்தால் துணை விதிகளுக்கு எதிராக தேர்தல் நடத்ததாக எடுத்துக்கொள்ளலாமா என்றால் சாட்சி இந்த கேள்விக்கு என்ன பதில் சொல்வது என தெரியவில்லை என கூறுகிறார். பி.சா.ஆ.1 சங்க துணை விதி 26 ஜி ல் தேர்தல் அதிகாரிகள் தேர்தலுக்கு நிற்கும் உறுப்பினர்களின் பெயர்களை ஒருவர் முன்மொழிய எழுதிக்கொண்டே வரவேண்டும் என்றும், பல உறுப்பினர்கள் பெயரை ஒரே சமயத்தில் முன்மொழிதலும்,

வழிமொழிதலும் மூலமும் ஏற்றுக்கொள்ளாலாம் என்றும், அவ்வாறு பெயர் எழுதுவதற்கு மொத்தம் அரை மணி நேரம் என்றும், குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். துனை விதி 26;Hல் வாபஸ் பெறுவதற்கு கொடுக்கப்பட்டுள்ள நேரம் அடுத்த அரை மணி நேரம் என்றும், வாபஸ் பெரும் நபர்கள் விரும்பும் விபரத்தை எழுத்து மூலமாக தேர்தல் அதிகாரிகளிடம் கொடுத்திட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்க துனை விதி 26ன் படி தாவாப்படும் தேர்தல் நடத்தப்படவில்லை என்றால் சரிதான். தாவாப்படும் தேர்தலில் எங்களுக்கு யானைச் சின்னமும், தோற்ற நபர்களுக்கு மீன் சின்னமும் யார் வழங்கியது என்றால் தேர்தல் ஆணையாளர் வழங்கினார். எந்த தேதியில் அந்த சின்னம் வழங்கப்பட்டது என்றால் தேர்தல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு தேர்தல் ஆணையாளர் வழங்கினார். தாவாப்படும் தேர்தலில் மொத்தம் எத்தனை நபர்கள் பேட்டியிட்டார்கள், எத்தனை பேர் தகுதிநீக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் எனக்கு சரியான எண்ணிக்கை நியாபகம் இல்லை. தாவாப்படும் தேர்தலில் வாங்கி அதை நிறப்பி முன்மொழிதல், வழிமொழிதல் செய்து நீதிமன்ற ஆணையரிடம் நேரில் கையில் கொடுத்தோம். அந்த வேட்பு மனுவை உறவின் முறை சங்கத்துக்கு சொந்தமான காமராஜர் இன்டர்நேஷனல் அக்கடாமில் வைத்து கொடுத்தோம். நீதிமன்ற ஆணையர் அந்த இடத்தை தான் தேர்தல் நடத்தும் இடமாக உத்தரவிட்டார். வேட்பு மனு யாரிடம் வாங்க வேண்டும்,, எங்கு வைத்து வாங்க வேண்டும் என்ற விபரத்தை தேர்தல் ஆணையாளர் ஏற்கனவே தெரிவித்திருந்தார். தேர்தல் ஆணையர் இது சம்பந்தமாக எழுத்து மூலமாக தெரிவித்தாரா அல்லது வாய்மொழியாக தெரிவித்தாரா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. தேர்தல் ஆணையர் இது சம்பந்தமாக எழுத்து

மூலமாக தெரிவித்தாரா அல்லது வாய்மொழியாக தெரிவித்தாரா என்ற விபரம் உறவின் முறை சங்கத்தின் ஆவணமாக உள்ளதா என்றால் இல்லை. தாவாப்படும் தேர்தலில் வெபற்றிப்பெற்ற 65 நபர்களுக்கு மாவட்ட பதிவாளர் படிவம் 7 கொடுத்துவிட்டாரா என்றால் கொடுத்துவிட்டார். அதன்படி 65 நபர்களும் தனித்தனி பொருப்புகளை எடுத்துக்கொண்டோம் என்றால் சரிதான். தேர்தல் சம்பந்தமாக ஆவணங்களை தேர்தல் நடத்திய ஆணையாளரிடம் நாங்கள் கேட்டோமா என்றால் நாங்கள் கேட்கவும் இல்லை. அவரும் கொடுக்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பாவது நீதிமன்ற ஆணையரிடம் என்ன வழிமுறைகளில் சங்க தேர்தல் நடந்தது குறித்த ஆவணங்களை இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு கேட்டோமா என்றால் கேட்கவில்லை. நீதிமன்ற ஆணையருக்கு இந்த வழக்கில் நாங்கள் தான் வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரை எங்கள் கைக்குள் பேட்டுக்கொண்டு சங்க பொருப்பில் இருந்ததால் சங்கத்தின் வீதிகளையும், நிதிகளையும் மோசடி செய்து தேர்தல் நடத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தகுதியான நபர்களின் வேட்புமனுவை நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயர் நீதிமன்றத்தில் பின்பற்றாமல் தாவாப்படும் தேர்தல் நடந்தது என்றால் சரியல்ல. தேர்தலுக்கு பின்னர் நாங்கள் பதவி ஏற்ற பின்னர் சங்க நிர்வாகிகளுக்கு எதிராக நிதி மோசடியில் ஈடுப்பட்டதாக புகார் காவல்துறை வரை வரப்பெற்றது என்றாலும் எங்கள் நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்கள், ஊழியர்கள் அவ்வாறு புகார் கொடுத்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. தகுதியுள்ளதா ஆட்கள் சங்கத்தில் தேர்தலில் போட்டியிட்டு சட்ட விரோதமாக தேர்ந்எடுக்கப்பட்டதால் ஒட்டுமொத்த சங்க நிர்வாகம் சீர்கெட்டு

அதன் அடிப்படையில் சங்க நிர்வாகத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள் முறையாக நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. தாவாப்படும் தேர்தல் முழுமையாக சட்ட விதிகளின் படி நடத்தப்படவில்லை என்றாலும், வாதிகளுக்கு பிராதில் கோரிய பரிகாரம் கிடைக்ககூடியது என்றாலும் தனிப்பட்ட சில நபர்கள் சங்கத்தின் ஒட்டு மொத்த நிர்வாகத்தையும் தங்கள் கையில்கொண்டு வருவதற்காக தேர்தல் ஆணையாளரை தங்கள் கைவசம் எடுத்து 1 முதல் 65 பிரதிவாதிகளையும் சங்க நிர்வாக குழு உறுப்பினர்களான தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றாலும் சரியல்ல. வாதிகள் பிராது அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.